ஆய்வுச்சுடர்: பன்னாட்டு பன்முகத்தமிழ் மின்-ஆய்விதழ்
ANJAC, SIVAKASI, TAMILNADU, INDIA மலர்-1, இதழ்-1, சனவரி 2018

குறுந்தொகையில் ஓரெழுத்து ஒருமொழி

நா. சுலோசனா

உதவிப் பேராசிரியர், தமிழ்மொழி மற்றும் மொழியியல் புலம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி
சென்னை- 600113, தமிழ்நாடு, இந்தியா.

முன்னுரை

சங்க இலக்கிய அகநூல்களுள் ஒன்று குறுந்தொகை. குறுந்தொகையில் ஓரெழுத்து ஒருமொழிப் பயன்பாட்டைக் காணமுடிகிறது. புலவர்கள், சொற்சிக்கனத்தைக் கடைப்பிடிக்கவும் கூறியது கூறலைத் தவிர்க்கவும் பாடலின் செழுமையைப் பெருக்கவும் ஓரெழுத்து ஒருமொழியைப் பயன்படுத்தி உள்ளனர். ஆ, ஈ, ஏ, ஐ, கை, சா, சே, தூ, தீ, தை, நோ, பூ, பை, பா, பே, மா, மை, யா, நா, நீ, வை, வீ, வா போன்ற ஓரெழுத்துச் சொற்கள் குறுந்தொகையில் பதிவுபெற்றுள்ளன. இச்சொற்களைக் குறித்த பயன்பாட்டுத் தன்மையை இக்கட்டுரை ஆய்ந்தறிகின்றது.

ஓரெழுத்து ஒருமொழி - இலக்கணநூல்கள் விளக்கம்

தொல்காப்பியம், நன்னூல் ஆகிய இரு இலக்கண நூல்களும் ஓரெழுத்துச் சொற்களைக் குறித்துக் கூறுகின்றன. தொல்காப்பியர் ஓரெழுத்து ஒருமொழி ஏழு எனக் குறிப்பதை,

'நெட்டெழுத்து ஏழே ஓரெழுத்து ஒருமொழி' *(தொல்காப்பியம், எழுத்ததிகாரம், 43)*

என்ற நூற்பா வழி அறியமுடிகின்றது.

'உயிர்மலி லாறுந் தபநவி லைந்துங்
குவச வினாலும் யவ்வி லொன்னு
மாகு நெடினொது வாங்குறி லிரண்டோ
டோரெழுத் தியல்பத மாறேழ் சிறப்பின' *(நன்னூல், எழுத்ததிகாரம், 129)*

என்ற நன்னூல் நூற்பா 42 எழுத்துக்களை ஓரெழுத்து ஒருமொழியாகக் குறிப்பிடுகின்றது.

தை

'தை' எனும் ஓரெழுத்து தமிழ்மாதம், தைத்தல், பொருத்து, தையல் போன்றவற்றைக் குறிக்கப் பயன்படுகின்றது.

'.....
பாரி பறம்பில் பனிச்சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கள் தண்ணிய தரினும்
வெய்ய உவர்க்கும் என்றனிர்
ஐய! அற்றால் அன்பில் பாலே' *(குறுந்தொகை, 196)*

இப்பாடலில் 'தை' என்ற ஓரெழுத்துச் சொல் பதிவு பெற்றுள்ளது. தை என்ற எழுத்தின் பின்வரும் திங்கள் எனும் சொல்லைக் கொண்டு 'தை' என்பதைத் தைமாதம் எனப் பொருள் கொள்ள முடிகின்றது.

'பனணத்தோள் குறுமகள் பாவை தை இயும்
பஞ்சாய்ப் பள்ளம்சூழ்ந்தும் மற்று இவள்
உருத்து எழுவன முலை ஒளிபெற எழுதிய
தொய்யில் காப்போர் அறிதலும் அறியார்' *(குறுந்தொகை, 276)*

இப்பாடல், தலைவியைத் தலைவன் மணம் முடிக்க உறவினர் மறுத்த நிலையைச் சுட்டுகின்றது.. அச்செயலை நினைத்து வருந்திய தலைவன் தலைவி விளையாடுவதற்காகப் பதுமை செய்து கொடுத்ததை நினைத்துப் பார்க்கிறான். 'பாவை தைஇ' என்பதில் 'தை' என்பது தைத்துக் கொடுப்பதைக் குறிக்கும். விளையாடும் போது பதுமையைப் புனைந்து தருவது எனும் பொருளில் 'தை' வந்துள்ளது.

நா

'நா' என்பது ஒருமைத் தன்மையையும் நாக்கையும் குறிக்கிறது.

'அமிழ்துபொதி செந்நா அஞ்சவந்த
வார்ந்து இலங்கு வைஎயிற்றுச் சின்மொழி அரிவையைப்
பெறுகதில் அம்ம! .....'. *(குறுந்தொகை, 14)*

இப்பாடலில், அமிழ்தம் போன்ற உமிழ்நீர் நிறைந்த செம்மையான நாவையுடையவள் தலைவி என்பதை 'அமிழ்துபொதி செந்நா' என்ற தொடர் குறிப்பிடுகின்றது. 'நா' என்பது நாக்கைக் குறிக்கும் ஓரெழுத்து ஒருமொழியாகும்.

'ஆற்றுபுயல் எழுந்த வெண்கோட்டு அதவத்து
எழுகுளிறு மிதித்த ஒரு பழம் போலக்
குழையக் கொடியோர் நாவே
காதலர் அகலக் கல் என்றவ்வே' *(குறுந்தொகை, 24)*

இப்பாடலில் 'கொடியோர் நாவே' என்பது ஊரார் பழிச்சொல்லைக் குறிக்கிறது. இங்கு 'நா' எனும் ஓரெழுத்து, நாக்கைக் குறிக்கிறது.



(நா - மணியின் நடுவே தொங்கும் கருவி)

'..... உறைசிறந்து
ஊதை தூற்றும் கூதிர் யாமத்து
ஆன் நுளம்பு உலம்பு தோறும் உளம்பும்
நூநவில் கொடுமணி நல்கூர் குரலே ' *(குறுந்தொகை, 86)*

குளிர்காலத்து நள்ளிரவில் மாட்டுக் கொட்டகையில் கட்டியிருக்கும் எருதின் மீது ஈ மொய்க்கிறது. எருது ஈயை விரட்டத் தன் கழுத்தில் கட்டியிருக்கும் மணியால் ஒலியை எழுப்புகிறது. மணியின் நடுவே தொங்கும் ஒலியை எழுப்பும் கருவிக்கு 'நாக்கு' என்று பொருளுண்டு. 'நாநவில் கொடுமணி' என்பதில் 'நா' என்பது நடுவிலே தொங்கும் கருவியைச் சுட்டுகின்றது.

வை

'வை' என்பது ஏவுதல், கூர்மை, வைக்கோல், வைதல், வைத்தல் போன்ற பொருள்களைக் குறிப்பிடுகிறது.

'வார்ந்து இலங்கு வைஎயிற்றுச் சின்மொழி அரிவையைப்
பெறுகதில் அம்ம! ..... ' *(குறுந்தொகை, 14)*

இப்பாடலடிகளில் வரிசையாக விளங்குகின்ற கூர்மையான பற்களை உடைய தலைவி, 'வைஎயிற்றுச் சின்மொழி அரிவை' எனச் சுட்டப்பெறுகின்றாள் இதில் 'வை' என்பது கூர்மையைச் சுட்டுகிறது.

பை

'பை' என்பது கைப்பை, பாம்புப்படம், பசுமை, உறை போன்றவற்றைக் குறிக்கும் ஓரெழுத்து ஒருமொழியாகும்.



(பை - பசுமை)

'இருமருப்பு எருமை ஈன்றணிக்கார் ஆன்
உழவன் யாத்த குழவியின் அகலாது
பாஅல் பைம்பயிர் ஆகும் ' *(குறுந்தொகை, 18)*

அண்மையில் கன்றை ஈன்ற எருமையானது உழவனால் கட்டப்பட்ட கன்றை விட்டுப் பிரியாமல் பக்கத்திலுள்ள பசுமையான பயிரை மேயும் என்பது இப்பாடலடிகளின் பொருளாகும். இதில் 'பை' என்பது பசுமையைக் குறிக்கிறது.



(பை - பாம்பு படமெடுத்தல்)

'பாம்பு பையவிந்தது போலக் கூம்பிக்
கொண்டலின் தொலைந்த ஒண்செங் காந்தள்
கன்மிசைக் கவிய ' *(குறுந்தொகை, 185)*

கீழ்க்காற்றால் சிவந்த காந்தள் மலர்கள் உதிர்ந்து கற்பாறையின்மேல் கிடக்கும் காட்சி, பல கோடுகளையுடைய பாம்புப்படம் ஒடுங்கிக் கிடப்பது போலக் காட்சியளிக்கிறது என்ற பொருளமைவிலான இப் பாடலில் 'பை' என்பது பாம்புப்படத்தைக் குறிக்கிறது.

'பனிப்புதல் இவர்ந்த பைம் கொடி அவரை'

(குறுந்தொகை, 240)

இப்பாடல் சுட்டும் 'பைம்கொடி அவரை என்பதில் 'பை' என்பது பசுமையான என்ற பொருளைக் குறிப்பிடுகிறது.

பா

'பா' எனும் ஓரெழுத்து ஒருமொழி, பாட்டு, கவிதை, நிழல், அழகு ஆகியவற்றைச் சுட்டுகின்றது. ஆனால், குறுந்தொகைப் பாடலில் 'பா' என்பது பெரிய அகலமான என்ற பொருளையும் சுட்டுகின்றது.

'பழுஉப்பல் அன்ன பருஉகிர்ப் பாஅடி
இருங்களிற்று இனநிரை ஏந்தல் ' *(குறுந்தொகை, 180)*

இப்பாடலில் 'பாஅடி' என்பது பெரிய பாதங்களை உடைய யானை எனும் பொருளில் குறிப்பிடப்படுகின்றது. இங்கு ´பா` எனும் ஓரெழுத்து பெரிய எனும் பொருளைத் தருகின்றது.

சா

'சா' என்னும் ஓரெழுத்து, இறத்தல், சாக்காடு, சோர்வு, மரணம், பேய், சாதல் ஆகிய பொருள்களில் அமைகின்றது. ஆனால் குறுந்தொகையில் 'சா' என்பது மெலிதல் என்னும் பொருளில் வந்துள்ளதை அறியமுடிகிறது.

'மடைமாண் செப்பில் தமிய வைகிய
பெய்யாப் பூவின் மெய் சாயினளே ' *(குறுந்தொகை, 9)*

மூடிய குடத்தினுள் வைக்கப்பட்ட சூட்டிக்கொள்ளப்படாத மலர்களைப் போல, பரத்தை வீட்டுக்குப் பிரிந்து சென்ற தலைவனை நினைத்துத் தலைவி உடல் மெலிந்ததாக இப்பாடல் விளக்குகிறது. 'சாயினள்' என்பதில் 'சா' என்பது மெலிதல் பொருளைத் தருவதாய் அமைகிறது.

யா

'யா' என்பது ஒரு வகை மரத்தைக் குறிக்கிறது. யா என்பது யாவை, இல்லை, அகலம் ஆகிய பொருள்களையும் சுட்டுகின்றது.

'பிடி பசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பொளிக்கும்
அன்பின் ' *(குறுந்தொகை, 37)*

எனும் பாடலில் ஆண்யானை பெண்யானையின் பசியைப் போக்கும் பொருட்டு மெல்லிய கிளைகளை உடைய யா மரத்தின் பட்டையை உரித்து அதிலுள்ள நீரை அருந்தச் செய்கிறதாம். இதில் 'யா' என்பது மரமாகும்.

'யாஅம் கொன்ற மரம் சுட்ட இயவு ' *(குறுந்தொகை, 198)*

இப்பாடலடி 'யா' மரத்தை அழித்து அதனைச் சுட்டுப்பொசுக்கி அவ்விடத்திலே தினை விதைப்பதைக் குறித்துள்ளது

தே

'தே' என்றால் கடவுள், நாயகன், தெய்வம் என்பது பொருளாகும். குறுந்தொகைப் பாடலில் 'தே' என்பதற்கு இனிய, இனிமை போன்ற பொருள்களைக் காணமுடிகின்றது. ***'தேக்கொக்கு அருந்தும்'*** *(குறுந்தொகை, 26)* எனும் தொடரில் 'கொக்கு' என்பது மாங்கனியையும், 'தே' என்பது இனிய என்பதையும் குறிக்கிறது. தேன் போன்ற இனிய சொற்களையும், மெல்லிய தோள்களையும் கொண்ட தலைவி என்பதற்கு ***'தேமொழித்திரண்ட மென்றோள்*** *(குறுந்தொகை, 72)* இனிய வெல்லக்கட்டி என்பதற்கு ***'தேம்பூங்கட்டி'*** *(குறுந்தொகை, 196),* போன்ற தொடர்களைக் காணமுடிகின்றது. இத்தொடர்களில் இடம்பெறும் 'தே' எனும் ஓரெழுத்து ஒருமொழி, பொருளைத் தருவது புலனாகின்றது.

பூ

'பூ' என்பது மலரைச் சுட்டுகிறது. பூ என்பது அதன் தன்மையைப் பொறுத்து அரும்பு, மொட்டு, போது, மலர், வீஎனப் பல சொற்களில் சுட்டப்படுகிறது. பூ மாலையைச் சூட்டுவதை,

'..... ..... பூ எனக்
குவிமுகிழ் எருக்கம் கண்ணியும் சூடுப ' *(குறுந்தொகை, 17)*

என்ற பாடல் கூறுகின்றது. ***ஒளியுள்ள பூ (ஒண்பூ, குறுந்தொகை, 24) மலரைப் போல (பூ ஒத்து, குறுந்தொகை, 72), பூவைப் போல மணம் வீசுகின்ற பலாக்கனி (பூநாறு பலவுக்கனி, குறுந்தொகை, 90, 373) வானத்தைப் போன்ற வெண்மையான மலர்கள் (வான்பூ, குறுந்தொகை, 1108) மலர்கள் நிறைந்த (பூ உடை, குறுந்தொகை, 134) மணம் பொருந்திய மலர் (பூநாறு, குறுந்தொகை, 200,242) வெண்மையான மலர்கள் (வெண் பூ, குறுந்தொகை, 329) நறுமணம் கமழும் மலர்ப் படுக்கை (நறும் பூம் சேக்கை குறுந்தொகை, 359)*** போன்ற சான்றுகள் 'பூ' எனும் ஓரெழுத்துச் சொல்லை நிறுவுகின்றன.

நீ

'நீ' எனும் ஓரெழுத்து ஒருமொழி, முன்னிலை ஒருமையைச் சுட்டுகின்றது. நீக்குதல் எனும் பொருளைக் குறிக்கின்றது.

'நீ' என் கிளவி ஒருமை குறித்தே' *(தொல்காப்பியம், சொல்லதிகாரம், 674)*

எனத் தொல்காப்பியர் சுட்டுகிறார்.

நீ அறியும் பூவே (குறுந்தொகை, 2), நீ அகலன் யான் (குறுந்தொகை, 36), யானும் நீயும் (குறுந்தொகை, 40), நீ ஆகியர் என் கணவனை (குறுந்தொகை, 49), நீ அழியல் வாழி (குறுந்தொகை, 73), நீயே (குறுந்தொகை, 107, 58), கள்வர் போல்வர் நீ அகன்றிசினோர்க்கே (குறுந்தொகை, 127), எனநீ சொல்லின் எவனோ தோழி (குறுந்தொகை, 141), நீயே அஞ்சல் (குறுந்தொகை, 300), நீ மறத்தியோ (குறுந்தொகை, 306), நீ நின் நயன் உடைமையின் வருதி (குறுந்தொகை, 324), நீ நயந்து (குறுந்தொகை, 332), எம் இல் வருகுவைநீ (குறுந்தொகை, 379), நீ எமக்கு இன்னாதன பல செய்யினும், நின் இன்று அமைதல் எல்லாம் ஆறே (குறுந்தொகை, 309), ஆகிய பாடல்களில் தலைவியையோ, தலைவனையோ சுட்ட முன்னிலை ஒருமையைக் குறிக்கவும் 'நீ' எனும் ஓரெழுத்துப் பயன்பட்டுள்ளது.



(மா - குதிரை)

மா

பெரிய, சிறந்த, உயர்ந்த, மாமரம் போன்ற பொருண்மைகளில் வரும் ஓரெழுத்து ஒருமொழி 'மா' ஆகும். குறுந்தொகையில் 'மா' என்னும் எழுத்து மிகுதியாகப் பயின்று வந்துள்ளது. தலைவன், தலைவி பண்பு மற்றும் தலைவன், தலைவி நாட்டின் வளம் ஆகியவற்றைச் சுட்டவும் பெரிய, சிறந்த, உயர்ந்த போன்ற பொருட்களை வலியுறுத்துவதற்கும் புலவர்கள் பயன்படுத்தி உள்ளனர். குதிரையைச் சுட்டுமிடத்து,

'மா என மடலும் ஊர்ப' *(குறுந்தொகை, 17)*

என வந்துள்ளது. இப்பாடலில் `மா' என்பது குதிரையாகும்.



(மா - மாமரம்)

பெரிய கொடி (மாக்கொடி, குறுந்தொகை, 36), பெரிய மழை (மாமழை, குறுந்தொகை, 42, 90, 94, 158, 200, 216, 319, 367, 391), நிறைந்த நீர் (மாநீர், குறுந்தொகை, 49), மிகுந்த குளிர்ச்சியுடைய மலர் (மாமலர், குறுந்தொகை, 51), பெரிய நீர்க்கழி (மாகழி, குறுந்தொகை, 55), சிறிய குதிரை (சிறுமா, குறுந்தொகை, 51), அழகிய தலைவி (அம் மா அரிவை, குறுந்தொகை, 63) பெரிய மலை (மாமலை, குறுந்தொகை, 72, 362, மாமரம், குறுந்தொகை, 73, 278, 306, 331), பெரிய மலை (மாமலை, குறுந்தொகை, 94, 215), கருமையான முகம் (மாமுகம், குறுந்தொகை, 121), பெரிய கடல் (மாக்கடல், குறுந்தொகை, 129), மாமை நிறம் (மா அயோளே, குறுந்தொகை, 132, 199, 300) பெரிய கிளை (மாச்சினை, குறுந்தொகை, 175, 192), கருமையான நீர் (மா நீர், குறுந்தொகை, 175), நலம் மிகுந்த சிறந்த மேனி (நன்மா மேனி, குறுந்தொகை, 185), பெரிய பிடரியை உடைய ஆண்மான் (மா எருத்து இரலை, குறுந்தொகை, 232), மிகப்பெரிய சோலை (மாயிரும் சோலை, குறுந்தொகை, 232), பெரிய மலர் (மாமலர், குறுந்தொகை, 317), கரிய இதழையுடைய குவளை மலர் (மாயிதழ்க் குவளை, குறுந்தொகை, 339), நெய்தலின் கரிய மலர் (நெய்தல் மாமலர், குறுந்தொகை, 397) போன்ற சான்றுகள் குறுந்தொகையில் மா என்ற ஓரெழுத்திற்குப் பெரிய, சிறந்த, உயர்ந்த, மரம், குதிரை, மாந்தளிர், நிறைந்த, மிகுந்த, கருமை, மாமை நிறம், அழகிய போன்ற பல்வேறு பொருள்கள் இருப்பதை நிறுவி நிற்கின்றன.

வீ

'வீ ' என்னும் ஓரெழுத்திற்கு மலர், அழிவு, பறவை ஆகிய பொருள்கள் உள்ளன. *வேங்கை வீ (குறுந்தொகை, 47), சிறுவீ ஞாழல் (குறுந்தொகை, 50, 328), பசுவீ முல்லை (குறுந்தொகை, 62), வெள்வீ தாழை (குறுந்தொகை, 163), ஒள்வீ (குறுந்தொகை, 233), சினைவீ (குறுந்தொகை, 247), வீ ததை கானல் (குறுந்தொகை, 304, 338, 386), பல் வீ (குறுந்தொகை, 341), நறுவீ (குறுந்தொகை, 347), சிறுவீ முல்லை (குறுந்தொகை, 348), சினை மருள் திரள் வீ (குறுந்தொகை, 397)* போன்ற குறுந்தொகைப் பாடலடிகளில் 'வீ என்பது மலரைக் குறிக்கின்றது.

நிறைவுரை

குறுந்தொகையில் பதிவுபெற்றுள்ள ஓரெழுத்துச் சொற்கள், புலவர்களின் சுருக்க மொழிப் பயன்பாடு, பல்வேறு பொருட்பயன்பாடு, செய்யுள் அழகுணர்வுப் பயன்பாடு போன்ற தன்மைகளில் பயன்படுத்தப் பெற்றிருப்பதை விளக்கி நிற்கின்றன.